தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 11 இதழ் : 2 டிசம்பர் 2014





சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். அமர்சிங் கத்திஜா

ரூன்கேடா, மத்தியப்பிரதேசம்

இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் அமர்சிங் கத்திஜா. நான் மத்தியபிரதேசம் ஜாபுவா மாவட்டத்தில் அமைந்துள்ள ரூன்கேடா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசுவை அறிவதற்கு முன் விக்கிரக ஆராதனை செய்பவனாக அந்தகாரத்திலும், பாவத்திலும், போதை பொருட்களுக்கும் அடிமையாக வாழ்ந்து வந்தேன். மற்றவர்களிடம் சண்டையிடுவது, மோசமான காரியங்களில் ஈடுபடுவது என்னுடைய பொழுது போக்காக இருந்தது.

எனது தகப்பனார் மடியா கத்திஜா இருதய நோயினால் பாதிக்கப்பட்டு அடிக்கடி இரத்த வாந்தி எடுத்து மிகவும் கஷ்டப்பட்டார். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் குஜராத்திலுள்ள கட்லாவ் கிராமத்தில் ஷாலோம் ஊழியர் நடத்தும் கூட்டத்தைக் குறித்து கேள்விப்பட்டு, எங்கள் தகப்பனாரைக் கூட்டிச் சென்றோம். அங்கு ஊழியர் எனது தகப்பனாருக்காக ஜெபித்த போது, அந்நாளிலிருந்து தேவன் எனது தகப்பனாருக்கு அற்புத சுகத்தைக் கொடுத்தார். தொடர்ந்து வாரந்தோறும் சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தோம். பின்பு 1993–ல் எனது சொந்த கிராமமாகிய ரூன்கேடாவில் எங்களது வீட்டிலேயே கூட்டம் ஆரம்பிக்கும்படியாக வேண்டிக்கொண்டார். ஆகவே, ஷாலோம் ஊழியர். சகோ. ராஜேஷ் சௌகான் அவர்களை அனுப்பி வைத்தார்கள். இப்படியாக மத்தியப்பிரதேசத்தில் முதல் சபை ரூன்கேடாவில் ஆரம்பிக்கப்பட்டது.

என்னுடைய சொந்த ஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரத்தினால் தேவன் எனது உள்ளத்தை நிரப்பினார். ஒரு நாள் நான் தனித்து ஜெபித்துக் கொண்டிருக்கும் போது பெரிய கூட்டத்தின் நடுவில் நான் நின்று செய்தி கொடுப்பது போலவும், வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்பது போலவும் அவர்கள் சுகத்தை பெறுவது போலவும் தரிசனத்தில் தேவன் காண்பித்தார். பின்பு ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று, தற்போது எனது சொந்த கிராமமாகிய ரூன்கேடாவில் ஊழியம் செய்து வருகிறேன். எனது சொந்த நிலத்தில் ஆலயம் கட்டப்பட்டு, ஆராதனை நடைபெற்று வருகிறது என் முழுக் கிராமமும் இயேசுவை அறிய வேண்டும், 10 புதிய ஊழியர்களையும் 10 கிளை சபைகளையும் உருவாக்க வேண்டும் என்ற தரிசனத்துடன் குடும்பத்தோடு ஊழியம் செய்து வருகிறோம். எனது தரிசனம் நிறைவேற ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Dr. T. Jeyakumar Mohan,** Kulasekaram, K.K. Dist.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## உங்கள் சகோதரனிடமிருந்து



***கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,***

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை ஷாலோம் பணித்தளத்திலிருந்து கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். சமாதான பிரபுவாம் இயேசு கிறிஸ்து தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரையும் சமாதானத்தினாலும், சந்தோஷத்தினாலும் நிரப்புவாராக! மேலும் 2014ம் வருடம் டிசம்பர் மாதம் வரை கர்த்தர் காத்து வந்து நம்மை நடத்தி ஆசீர்வதித்து வந்தபடியால் சங்கீதக்காரன் சொன்ன **“என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே”.** (சங்.103:1,2) – இந்த வசனங்களின்படி அவரை ஸ்தோத்தரிப்போம்.

2014ம் ஆண்டு முழுவதும் இயேசு கிறிஸ்துவை நேசித்து, ஷாலோம் ஊழிய தரிசன பணிக்கு தொடர்ந்து பீல் மக்களை நேசித்து, எங்கள் குடும்பத்தையும் நேசித்து நீங்கள் பாராட்டின அன்பிற்காகவும், ஜெபங்களுக்காகவும், தியாகமான ஆதரவுகளுக்காகவும் தேவனை துதித்து உங்களுக்கு நன்றியையும் தெரிவிக்கிறோம். தேவன் தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் ஊழியங்களையும், கையின் பிரயாசங்களையும் பல மடங்கு ஆசீர்வதிப்பாராக!

கடந்த நவம்பர் மாதத்தில் திட்டமிட்டபடி அனைத்து ஊழியங்களும் சிறப்பாக நடைபெற்றது. குறிப்பாக **சகோ. R.D. சுந்தர்சிங்** (இயேசுவின் ஊழியங்கள், நெய்யாட்டின்கரை) அவர்கள் குடும்பம், **Pr. ஜார்ஜ் ராபர்ட்** (Praise Tower Chennai) அவர்கள் குடும்பம், **சகோ. ஜெயசிங்** அவர்கள் குடும்பம் (D.S. Group Chennai) மற்றும் **சகோ. ஸ்டீபன்** (இயேசுவின் அன்பு ஊழியங்கள், சென்னை) குடும்பமாக பணித்தளங்களுக்கு வந்து ஊழியங்களை ஆசீர்வதித்தார்கள்.

மேலும் இயேசு விடுவிக்கிறார் மூலமாக கொடுத்த காணிக்கையை கொடுத்து ஆலயம் கட்ட உதவிய **Bro. Lan David** அவர்கள் பணித்தளம் வந்தார்கள். தேவ கிருபையால் இவர்கள் யாவரின் மூலமாக கொடுக்கப்பட்ட நிதி உதவி மூலமாக 9 கிராம ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. **தேவனுக்கே மகிமை!** மற்றும் அவர்களின் ஊழியங்களை இம்மாத மலரின் மூலமாகவும் அடுத்த மாத மலரின் மூலமாகவும் அறிந்து தேவனைத் துதியுங்கள்.

தேவகிருபையால் குஜராத், மத்தியப்பிரதேசம் இடங்களில் சிறுவர்களுக்கான சிறப்பு முகாம்கள் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** தலைமையில் சிறப்பாக நடைபெற்று பலநூறு சிறுவர்கள் ஒவ்வொரு முகாமிலும் பங்கெடுத்து ஆசீர்வாதங்களையும், அபிஷேகத்தையும் பெற்றார்கள். **தேவனுக்கே மகிமை!**

தொடர்ந்து டிசம்பர் மாதத்தில் அனைத்து ஊழியர்கள் கூடுகைக்காக ஜெபியுங்கள். இம்மாதம் அனைத்து 580 சுதேச ஊழியர், ஊழியக்காரிகள், அவர்கள் பிள்ளைகள் 1700 பேர்களுக்கு புத்தாடைகள் வழங்க வேண்டும். சிறப்புக் கூட்டங்கள், நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். மேலும் நாம் தாங்கி வரும் ஆதிவாசி பிள்ளைகளுக்கு புத்தாடைகளும், குஜராத் தாகோத் பணித்தளம், பள்ளி, விடுதி, மருத்துவமனை மற்றும் Project-ல் பணிபுரியும் ஊழியர்கள், தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள், முன்னேற்ற பணியாள் குடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் புத்தாடைகள் மற்றும் வெகுமதி வழங்க வேண்டும். இவ்வருடம் அதற்காக **ரூ. 15 இலட்சங்கள்** தேவைப்படுகிறது. ஆகையால் தயவாக உங்கள் பங்குகளை மறவாது உடனடியாக அனுப்ப வேண்டுகிறேன்.

3 மாநிலங்களில் விசுவாசிகள் உள்ள அனைத்து கிராமங்களிலும் நடைபெற உள்ள கிறிஸ்துமஸ் கீத ஆராதனைகள் எந்த தடை, எதிர்ப்புமின்றி நடைபெறவும் அதன் மூலமாக அருகில் உள்ள குடும்பங்களுக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட ஜெபியுங்கள். அனைத்து ஷாலோம் விசுவாசி குடும்பங்கள் ஆளுக்கு ஒரு குடும்பமாக **“கிறிஸ்துமஸ்”** நற்செய்தியை அறிவித்து தேவனண்டை வழிநடத்தி வர உற்சாகப்படுத்தியுள்ளோம். ஷாலோம் சபைகள், விசுவாசிகள் அறிவிக்கும் சபையாக விசுவாசிகளாக தேவன் பயன்படுத்த ஜெபியுங்கள்.

நீங்களும் கூட கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆவியோடும், உண்மையோடும் ஆராதித்து, சபையாக, குடும்பமாக, உறவினர்களாக கர்த்தரில் மகிழ்ந்து களிகூர்ந்து ஆசரிப்பது மட்டுமல்லாமல் ஒவ்வொரு விசுவாசிகளும் குறைந்தது ஒரு நபருக்காவது, குடும்பத்திற்காவது கிறிஸ்துமஸ் செய்தியை பகிர்ந்து இல்லத்திற்கு, சபைக்கு அழைத்து வந்து தேவனண்டை நடத்துங்கள். அதுதான் அர்த்தமுள்ள பகிர்ந்துக் கொள்ளும் கிறிஸ்துமஸ் பண்டிகையாக இருக்கும்.


குறிப்பாக இந்த டிசம்பர் மாதத்திலும் 10 கிராமங்கள் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. இன்னும் தேவ ஊழியர்கள், ஷாலோம் ஆதரவாளர்கள் பணித்தளம் வருகை தர உள்ளார்கள். அனைத்து ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். எனக்காகவும், என் மனைவி வஹிதாவுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். மேலும் எங்கள் குடும்பத்தின் சார்பில் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

**“ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்.” யோபு 9 : 10**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்) என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

# கண்கள் கண்ட இரட்சணியம்



சிறப்புச் செய்தி : பேராயர். **V. தேவதாஸ்**

சமாதான பிரபுவாம் இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையான அவர் பிறப்பின் மகிழ்ச்சியை உலகமெங்கும் தேவ பிள்ளைகள் சந்தோஷமாக கொண்டாடும் மாதம். தேவ அன்பு உலகில் வெளிப்பட்ட அந்நாளில் கிறிஸ்துவின் பிறப்பினைப் பற்றிய பாடல்களை பாடி ஆராதித்து, துதித்து மகிழ்கிறோம். அதே வேளையில் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து வேதத்தை அதிகமாய் தியானிப்பது மிக நலமாயிருக்கும்.



தேவன் உலகத்தில் தம் குமாரனை அனுப்பின அந்த வேளை தேவன் பயன்படுத்திய பாத்திரங்கள், தேவகுமாரன் அனுப்பப்பட்ட நோக்கம் இவைகளை அதிகமாய் சிந்திக்க வேண்டும். தேவன் பயன்படுத்திய பாத்திரங்களில் மிக முக்கியமானவர்களில் சிமியோனும் ஒருவர். இந்த சிமியோனைப் பற்றி வேதம் இவ்வாறு கூறுகிறது. கிறிஸ்துவின் முதல் வருகைக்கு அநேக பரிசுத்தவான்கள் காத்துக்கொண்டிருந்த வேளையில் எருசலேமில் தேவன் சிமியோனைத் தெரிந்து கொண்டார்.

**a. அவன் நீதியும், தேவபக்தியும் உள்ளவனாக இருந்தான்**

நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களை கர்த்தர் நேசிக்கிறார். அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் விசேஷித்த கிருபைகளை தருகிறார்.

**b. இஸ்ரவேலின் ஆறுதல் வர காத்திருந்தான்**

பாவத்தின் அடிமைத்தனத்திலிருக்கும் இஸ்ரவேலை மீட்க மேசியா வருவார். அதுவும் என் தலைமுறையிலே நிச்சயமாக வருவார் என விசுவாசித்து காத்திருந்தான். விசுவாசித்து காத்திருந்தபடியே அவன் இஸ்ரவேலின் ஆறுதலான **“இயேசுவை”** கண்களால் கண்டான். நாம் வாழ்கின்ற தலைமுறையில் உலக ரட்சகராம் இயேசுவை நம் தலைமுறையில் நம் தேசம் கண்டுகொள்ளும் என்று விசுவாசித்து காத்திருப்பவர்களை தேவன் விரும்புகிறார். அப்படி விசுவாசித்து ஜெபிக்கிற, உழைக்கிற, கொடுக்கிற ஜனங்களை தேவன் சந்திக்கிறார். அவர்களை ஆசீர்வதித்து, அவர்களை கனப்படுத்துகிறார்.

**C. அவன் தேவனை துதிக்கிறவனாய் இருந்தான்.**

அவன் அவரை (இயேசு பாலகனை) தன் கைகளில் ஏந்திக் கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்தார். (லூக்கா – 2:28) அவர் உள்ளம் துதியினால் நிறைந்திருந்தது. கர்த்தரை

நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும் என்று தாவீது ராஜா பாடினது போல, சிமியோனும் தேவனை ஸ்தோத்தரித்து, துதித்தான். தேவ சமாதானம் அவரை ஆட்கொண்டது. நாமும் கூட தினமும் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். அவரை துதித்து பாட வேண்டும். அவர் துதி எப்போதும் நம் வாயிலிருக்கும் போது, தேவ சமாதானத்தினால் நிரப்பப்படுவோம். ஏனென்றால் அவர் பெயர் சமாதான பிரபு யெகோவா ஷாலோம் என்பதாகும்.

### c. அவன் மேல் பரிசுத்த ஆவி இருந்தார்

அவன் மேல் பரிசுத்த ஆவியானவர் இருந்தபடியால் அவருடைய ஏவுதலின்படி இயேசுவைக் காணும்படி எருசலேம் தேவாலயத்திற்கு வந்தார். இயேசுவை தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனை ஸ்தோத்திரித்தார். இந்தக் கடைசி நாட்களில் தேவன் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை மாம்சமான யாவருக்கும், நம் குமாரர், குமாரத்திகள், மூப்பர்கள், ஊழியக்காரர்கள் மீது ஊற்றுவேன் என வாக்களித்துள்ளார். அவருடைய ஏவுதலின்படி அவருடைய பெலத்தினால் சாட்சிகளாய் வாழ, ஊழியம் செய்து இரண்டாம் வருகைக்கு அநேகரை ஆயத்தப்படுத்துவோம். நாமும் ஆயத்தமாவோம். எருசலேம் தேவாலயத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்படி வந்து இயேசுபாலகனை கைகளில் ஏந்தி, ஸ்தோத்தரித்து **“இயேசு கிறிஸ்துவை”** குறித்து அழகான கீதம் ஒன்றைப் பாடினார். **“ஆண்டவரே.......கண்கள் கண்டது”** என்றார். லூக்கா 2 : 29 – 32.

### 1. புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளி

பரிசுத்த ஆவியானவரால் நிரம்பிய சிமியோன் இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து பாடும்போது முதலாவதாக புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகக் கண்டு தேவனைத் துதித்தார். இயேசுவின் பிறப்பின் நற்செய்தி நமக்காக மட்டுமல்ல குறிப்பாக இயேசுவை அறியாத ஜனங்கள் பாவத்திலும், சாபத்திலும், கட்டுகளிலும் வாழ்கிற புறஜாதி ஜனங்களுக்கு அவர் தான் பிரகாசிக்கிற ஒளி. “உலகிலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி” (யோவான் 1 : 9) என்று இயேசுவின் நற்செய்தி பணியின் விளைவை வேதம் கூறுகிறது. அப்படியான அந்த மெய்யான ஒளியான இயேசுவை நம் வாழ்வின் மூலமாக மற்றவர்களுக்கு பிரகாசம் கிடைக்கச் செய்வோம். அந்தகாரத்திலும், மரண இருளிலும் கிடக்கும் புறஜாதிகளுக்கு அறிவிக்கப்படாத இடங்களில் இந்த ஒளியாக, இயேசுவை ஏற்றுக்கொண்ட ஊழியர்களை அனுப்புவோம். சுவிசேஷத்தின் பிரகாசத்தை இருளில் வாழும் மக்களுக்கு எடுத்துச்செல்லும் ஊழியர்களை ஜெபித்துத் தாங்குவோம். இயேசு சொன்னார், **“நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.” மத்தேயு 5 : 14**

### 2. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமை

இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் மூலம் தேவஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமை உண்டாகிறது. யூதராஜசிங்கமாக, இரட்சிக்கும் மேசியாவாக அவர் வந்தார். ஜீவ அப்பமாக, ஜீவ தண்ணீராக, நல்ல மேய்ப்பனாக, ஒளியாக, வழியாக, சத்தியமாக, ஜீவனுமாக, உயிர்த்தெழுதலுமாக

அவர் வந்தார். வேதம் சொல்லுகிறது, ஏனெனில் ''அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதான பிரபு'' (ஏசாயா 9 : 6) இப்படிப்பட்ட ஆண்டவரின் பிறப்பின் மூலமாக தேவஜனத்திற்கு மகிமை உண்டாகிறது. ஆகவே உலகெங்கும் தேவ சபைக்கும், ஊழியர்களுக்கும், தேவ பிள்ளைகளின் குடும்பங்களுக்கும் நிச்சயமாக இம்மானுவேல் இயேசுவின் மூலம் மகிமை உண்டாவதாக!

**3. கண்கள் கண்ட இரட்சணியம்**

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடி ஆசரிப்பது நல்லதுதான். அதேவேளையில் நம் கண்கள் இயேசுவின் இரட்சண்யத்தைக் காண வேண்டும். இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதின் மூலமாக அந்த அனுபவத்தைப் பெற வேண்டும். பெயரளவில் நான் கிறிஸ்தவன், கிறிஸ்தவள் என்று கூறப்படுவது அல்ல. சிமியோனைப் போல் உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது (லூக்கா 2 : 32) என்ற அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும். நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு அவைகளை விட்டுவிட்டு, இயேசுவை சொந்த இரட்சகராக இதயத்தில் ஏற்றுக்கொள்ளும் போதுதான் நாம் அப்படிக் கூற முடியும். அப்போதுதான் உலகம் தரக்கூடாத கிறிஸ்துவின் பிறப்பின் சமாதானமும், சந்தோஷமும் நாம் பெற்றுக் கொள்ள முடியும். இந்த சிலாக்கியம் பெற்ற சிமியோன் ''உமது அடியேனை இப்போது சமாதானத்துடன் போக விடுகிறீர்'' **(லூக்கா 2 : 29)** என நம்பிக்கையுடன் வாழ்க்கையை முடிக்க ஆயத்தமாகிறார். இப்படிப்பட்ட ஆனந்தபாக்கியம் நமக்கு உண்டா?

புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாகவும், இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் இருக்கும் ''இயேசு'' என்ற இரட்சண்யத்தை நாம் எல்லாரும் கண்டு இயேசுவின் பிறப்பின் ஆசீர்வாத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் கிருபை தருவாராக. சிமியோனைப் போல் மிகவும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய்; சொந்த ஜனத்திற்கு ஆறுதல் வர காத்திருப்பவர்களாய் பரிசுத்த ஆவியால் எப்போதும் நிறைந்திருப்போம். தேவன் தாமே நம் அனைவரையும் இம்மன மகிழ்ச்சியான மாதத்தில் ஆசீர்வதிப்பாராக.

## ஷாலோம் ஜெபக்குழு

**பிரியமானவர்களே,** கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கும் அநேக ஜெபக் குழுக்களை தேவன் தந்துள்ளார். இந்த ஜெபக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டுவருகின்றமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

இதை வாசிக்கின்ற உங்களையும் மாதம் ஒரு முறை கூடி **ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்திய தேசத்திற்காகவும்** ஜெபிக்கும்படியாக தேவன் ஏவுவாராகில் உங்கள் பகுதியில் ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்து ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்பி வைக்கிறோம். தேவன்தாமே ஜெபத்தின் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! தொடர்புக்கு : 9698044522, 0461 – 2375468, 2377737

# கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆதிவாசி மக்கள் கொண்டாட உதவுங்கள்



**“உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி”.** யோவான் 1:9

உலகத்தை இரட்சிக்க பாலகனாய் பூமியில் கிறிஸ்து அவதரித்த அந்த நன்னாளில், கிறிஸ்துவின் தியாகத்தையும், தாழ்மையையும் நினைத்து நன்றி கூறுவதோடு மட்டுமல்லாமல், அவருடைய சுவிசேஷத்தை உலகத்திற்கு அறிவிப்பதும் நமது கடமையாகும். கிறிஸ்து பிறந்த அந்த நாளை நினைத்து நாம் கொண்டாடுவது மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ள எளியவர்களுக்கு நம்மால் இயன்ற வரையில் உதவி செய்யக் கர்த்தர்தாமே பலப்படுத்துவாராக !

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்துமஸ் பண்டிகையை மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை ஒவ்வொரு கிறிஸ்துமஸ் தினத்திலும் கொடுத்து வருகிறோம்.

இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ. 15 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் **ஒரு சுதேச ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1500/– அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு பில் ஆதிவாசி மாணவருக்கு குறைந்தது ரூ. 500/– அல்லது அதற்கு மேலாகவோ,** கிறிஸ்துமஸ் வெகுமதியாக அக்டோபர் அல்லது நவம்பர் மாத ஆதரவுத் தொகையோடு சேர்த்துக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் ஊழியர், பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.



*“...மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்”. -இயேசு (மத்தேயு 25:40)*

**இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ்-ஐ வரவேற்று, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்!!**

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. கோர்சிங் R. டாமோர் புரக்குவா**

ரமேஷ்பாய் என்ற சகோதரர் ஒரு மாத காலமாக நெஞ்சு வலியினால் மிகவும் கஷ்டப்பட்டார். மருத்துவம் செய்தும் பலனில்லாமல், ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது ஜெபத்தைக் கேட்டு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

உஷா என்ற சகோதரி பாவ வாழ்க்கையில் வாழ்ந்து வந்தார். இவரது பாவ வாழ்க்கையிலிருந்து வெளிவர முடியவில்லை. இறுதியாக ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் பாவத்திலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

**Pr. ஹாவ்சிங் N. சங்காடா பாரேவா**

காளி என்ற சகோதரி பிசாசின் பிடியினில் சிக்கி மிகவும் அலைக்கழிக்கப்பட்டார். ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. கண்ணு L. பாபோர் மால்வாசி**

சுனித்தா என்ற சகோதரி பிசாசின் பிடியினில் சிக்கியிருந்தார். இதனால் இவருக்கு வயிற்றில் கட்டி இருப்பது போன்று இருந்தது. இதற்காக ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியிலிருந்தும், கட்டியிலிருந்தும் விடுதலைக் கொடுத்தார்.

**Pr. கேசவ் C. பார்மர் நெல்சூர்**

சகுடி என்ற சகோதரியின் குழந்தை பிறந்தவுடன் சுவாசிக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டது. இந்த குழந்தைக்காக ஜெபித்தபோது, ஒரு மணி நேரத்திற்குப் பின் நன்றாக சுவாசிக்க ஆரம்பித்தது.

**Pr. கேம்சந்த் Z. மாவி போர்கேடா**

ஐங்கலா என்ற சகோதரரின் பிள்ளைக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. நேரில் செல்ல முடியாத சூழ்நிலையில் அந்த பிள்ளைக்காக தொலைபேசியில் ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. குமன் J. டாமோர் கரம்பா**

தேர்சிங் என்ற சகோதரனின் மனைவியை தேள் கடித்துவிட்டது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபித்தபோது தேவன் விஷத்தை நீக்கி ஜீவனைப் பாதுகாத்தார்.

**Pr. லாகுடி சாம்ஜி மெய்டா ஜெரி**

ராஜேஷ் என்ற 25 வயது நிரம்பிய சகோதரர் குடி பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். இந்த பழக்கத்தை விடமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலை தந்தார்.

**Pr. லாகுடி சாம்ஜி மெய்டா ஜெரி**

ரசலி என்ற சகோதரி நிற்கவும், நடக்கவும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். கையில் குச்சி இருந்தால்தான் இவரால் நடக்க முடியும். இந்தச் சூழ்நிலையில் ஆலயத்தில் நடந்த சுகமளிக்கும் ஆராதனைக்கு மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். ஜெபத்தைக் கேட்டு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. கிர்தன் K. அமலியார் காப்ரியா**

வனிதா என்ற சகோதரி பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்ததால் இவருக்கு கண்பார்வை இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைக் கொடுத்ததோடு, நல்ல கண் பார்வையையும் கொடுத்தார்.

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. பாதர் D. டோடியார் பேடவ்நாத்**

காத்துபாய் என்ற சகோதரர் ஒரு வருடமாக வயிற்றில் ஏற்பட்ட கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். எத்தனையோ மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் குணமாகவில்லை. இறுதியாக ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. கல்லு K. டின்டோர் தாத்கா**

பமிலா என்ற சகோதரி வயிற்றிலிருந்த கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இறுதியாக ஜெபித்தபோது தேவன் கட்டியினை மறைபச் செய்து அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. எத்தர்சிங் H. டாமோர் தாத்கட் தலாவ்**

பூரிபேன் என்ற சகோதரி நெஞ்சு வலியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

சபுபேன் என்ற சகோதரி பிசாசினால் பாதிக்கப்பட்டு மிகவும் வேதனையை அனுபவித்து வந்தார். இறுதியாக ஜெபிக்கும்படியாக வந்தபோது, தேவன் ஜெபத்தைக் கேட்டு பிசாசை விரட்டி விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. ஈஸ்வர்லால் D. டின்டோர் பர்னாலா**

மீராபேன் என்ற சகோதரி மஞ்சள் காமாலை நோயினால் மிகவும் வேதனைப்பட்டு வந்தார். இவரை சபைக்கு கொண்டு வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புதமாக நோயை நீக்கி சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. துலா கராசியா ரோகன்யா மன்னா**

லாலு என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. இவருக்காக ஜெபித்தபோது தேவன் விஷம் ஏறாமல் தடுத்து, ஜீவனைப் பாதுகாத்தார்.

**Pr. காளியா T. தாமா பண்டுவால்**

சுரேஷ் என்ற சகோதரன் அசுத்த ஆவியின் பிடியினால் மிகவும் அலைக்கழிக்கப்பட்டார். இவருக்காக ஜெபிக்கும்படி சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலைக் கொடுத்தார்.

ஹுர்ஜி பாய் என்ற சகோதரனுடைய மகன் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு சுய நினைவு இல்லாமல் போனான். இவனை ஷாலோம் சபைக்கு தூக்கி வந்தார்கள். இந்த மகனுக்காக பாரத்தோடு ஜெபித்தபோது, தேவன் உடனடியாக சுகத்தைக் கொடுத்து பெரிய அற்புதத்தைச் செய்தார்.

**Pr. பாதர் D. டோடியார் பேடவ்நாத்**

ஹவ்லா என்ற சகோதரர் ஒரு வருடமாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவிகளை விரட்டி விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. பதூர் K. மேடா சாலியா**

மீரா என்ற சகோதரி அசுத்த ஆவியின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்குக் கொண்டு வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

## பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

### மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. அபிஷேக் N. நினாமா — பிப்ளிபாடா**

பதலி என்ற சகோதரி 15 வருடமாக நடக்கமுடியாமல் கஷ்டப்பட்டு வந்தார். இவரை ஷாலோம் சபைக்கு ஜெபிக்கும்படியாகக் கொண்டு வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக சுகத்தினைக் கொடுத்து நடக்கச் செய்தார்.

**Pr. ஹர்சிங் K. புரியா — சாரேல்**

தொல்சிங் என்ற சகோதரன் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக அவர் குடும்பத்தில் சமாதானமில்லாமல் காணப்பட்டார். பின்னர் சபைக்கு வந்து ஜெபித்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, மிகுந்த சமாதானத்தைப் பெற்றார்.

விசாலி என்ற சகோதரி கண்கள் சரியாகத் தெரியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார்.

**Pr. ஜங்ளா R. டாமோர் — நாகன்வானி**

பூர்சிங் என்ற சகோதரர் டைபாய்டு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

நகட்டியா என்ற சகோதரனின் மகள் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தாள். இவளுக்காக ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவியை விரட்டி சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. பகதூர்சிங் புரியா — ஜாராதாபூர்**

உஷா என்ற சகோதரியின் வயிற்றில் கட்டி இருந்தது. அநேக இடங்களுக்குச் சென்று மருத்துவமும், மந்திரமும் செய்தும் பலனில்லாமல் ஜெபிக்கும்படியாக வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் கட்டியை நீக்கி சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. பகதூர்சிங் டாமோர் — பியாதாபார்**

லிம்பு என்ற சகோதரி அசுத்த ஆவியின் பிடியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். அநேக மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் பலனில்லை. இறுதியாக ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. ஜாலு B. பார்கி போசாக்**

ஹக்ரி என்ற சகோதரி பிசாசின் பிடியினில் சிக்கி மிகவும் கஷ்டப்பட்டார். இவர் சுகமளிக்கும் ஆராதனையில் கலந்துக் கொண்டு ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. காலு K. குண்டியா — நங்கன்வாட்**

எலியா என்பவரின் மகன் சிறு நீர் செல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டான். இவனுக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்

**Pr. ஹிம்மத்சிங் S. சிங்காடா — காகுடா**

ரமேஷ் என்ற சிறுவனை தேள் கடித்துவிட்டது. ஜெபத்தின் மூலம் தேவன் ஜீவனைப் பாதுகாத்தார்.

## ஷாலோம் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாம் - 2014

கர்த்தருடைய பெரிதான கிருபையாலும் அவருடைய அநாதி தீர்மானத்தின்படியும் 2014–ம் ஆண்டின் **ஷாலோம் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாம்** கடந்த அக்டோபர் மாதம் 27–ம் தேதி முதல் 30–ம் தேதி வரை 4 நாட்கள் குஜராத், பரூச் பட்டணத்திலுள்ள Spiritual Life Centre–ல் வைத்து நடைபெற்றது. இந்த முகாமிற்காக அனைத்து சுதேச ஊழியர்களும் தங்கள் சபைகளில் விசேஷ உபவாச நாளை நியமித்து, ஜெபித்து, தாங்களும் ஆயத்தத்துடன் வந்திருந்தார்கள். மேலும் முகாமிற்கான அனைத்து ஒழுங்குகளும் ஜெபத்துடன் செய்யப்பட்டது.

அனைத்து ஊழியர் குடும்பங்களும் அக்டோபர் 27–ம் தேதி திங்கட்கிழமை காலையில் தங்கள் பணித்தளங்களிலிருந்து புறப்பட்டு, மாலையில் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்ட மையத்திற்கு வந்து சேர்ந்தார்கள். முதலாவதாக கலந்து கொண்ட அனைவரின் பெயர்களும் பதிவு செய்யப்பட்டு, அனைவருக்கும் பிரசங்க குறிப்பெழுதுவதற்கு, குறிப்பேடும் பேனாவும் வழங்கப்பட்டது. இம்முகாமில் சிறப்பு செய்தியளிக்கும்படியாக இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் ஸ்தாபகர் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களும், **போதகர். C. ஜான்ராஜ்** (உள்ளங்கை அளவு மேகம் ஊழியங்கள், சிவகாசி) அவர்களும், ஆராதனை நடத்தும்படியாக **போதகர். டேனியேல் ராஜ்** (மும்பை) அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். 27–ம் தேதி திங்கட்கிழமை மாலையில் முதல் கூட்டம் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. **போதகர். டேனியேல்** மற்றும் குழுவினர் ஆராதனை நடத்தினார்கள். தொடர்ந்து போதகர்.ஜான்ராஜ் அவர்கள் சுதந்தரிக்கும் ஊழியத்தைக் குறித்து, வேதத்தில் காலேபின் வாழ்க்கையிலிருந்து செய்தியளித்தார்கள். **பேராயர். தேவதாஸ்** அவர்கள் இதை மொழிபெயர்த்தார்கள்.

இரண்டாம் நாளன்று 28–ம் தேதி காலை ஆராதனை வேளையைத் தொடர்ந்து, முகாமிற்கு செய்தியளிக்க வந்திருந்த கர்த்தருடைய தாசர்களையும் பேராயரின் குடும்பத்தினரையும் பீல் கலாச்சார முறைப்படி, பாகுடி, சால்வை மற்றும் மாலை அணிவித்து அன்புடன் சிறப்பு வரவேற்பு அளித்தார்கள். அதைத் தொடர்ந்து **போதகர். ஜான்ராஜ்** அவர்கள் 2 வகை ஊழியங்களைக் குறித்து (Personal Evangelism & Mass Evangelism) 1 : 1 : 1 அதாவது 1 ஊழியர் 1 வருடத்தில் புதிய 1 ஊழியரை ஏற்படுத்த வேண்டும். அதேப்போன்று 1 சபை 1 வருடத்தில் புதிய 1 சபையை உருவாக்க வேண்டும் என்பதை பற்றி செய்தியளித்தார்கள். இதை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அதைத் தொடர்ந்து **போதகர். டேனியேல் ராஜ்** அவர்கள் கிதியோனைக் குறித்தும் அவனுடைய குணாதிசயங்களைக் குறித்தும் செய்தியளித்தார்கள். அதன் பின் மாலை வேளையில் சந்தியா கூட்டத்தில் ஆரம்பத்தில் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அதில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய ஊழியர்கள் தனித்தனியே தங்கள் கலாச்சார நடனத்தை ஆடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். மற்றும் நமது ஊழியர்களின் பிள்ளைகளின் நடனம் இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்களுக்கு கலாச்சார முறைப்படி

சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பின் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் தேவன் இந்த முகாமிற்கென்று விசேஷமாய் தந்த வாக்குத்தத்தமாகிய நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் (எபிரேயர் – 6:14) என்பதிலிருந்து **"நீங்கள் பெருக வேண்டும்"** என்ற தலைப்பின் கீழ் நமக்குள் தேவ அக்கினி பற்றி எரியும் போது தான் நாம் பெருக முடியும் என்பதைக் குறித்து செய்தியளிக்க **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள்.

இறுதியில் ஜெப வேளையில் அனைவர் மீதும் தேவ ஆவியானவர் வல்லமையாக இறங்கினார். அழைப்புக் கொடுத்த போது சுமார் 100 பேரை ஆவியானவரே முன்னாக இழுத்துக் கொண்டு வந்து, பிரத்தியேகமான அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. அப்போஸ்தலர் 2–ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் அக்கினியாய் இறங்கியது போல இந்த நாளில் இறங்கியது ஒரு பின்மாரியாக இருந்தது. அனைவரும் ஒரு புதிய அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இரவு 11 மணி வரை கூட்டம் நடைபெற்ற போதிலும் ஊழியர்கள் வாஞ்சையோடு ஆவியில் பெலங்கொண்டார்கள்.

மறுநாள் 29–ம் தேதி காலையில் ஆராதனையைத் தொடர்ந்து **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் முதலாவது குடும்பத்தில் ஒரு எழுப்புதல் வேண்டும் என்று குடும்பத்தைக் குறித்து தேவ செய்தியை அளிக்க **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அதைத் தொடர்ந்து 10,11,12–ம் வகுப்பு மற்றும் உயர் கல்வி பயிலும் நமது சுதேச ஊழியர்களின் பிள்ளைகளை தனியாக சந்தித்து, வேதத்திலிருந்து ஆலோசனைகளை வழங்கி அவர்களை ஆசீர்வதித்து சிறப்பு ஜெபம் செய்தார்கள். பின்பு கலந்து கொண்ட அனைத்து பிள்ளைகளுக்கும் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் படிப்புக்கு தேவையான உபகரணங்களை பரிசாக வழங்கினார்கள். பின்பு இரண்டாவது பகுதியாக **போதகர். ஜான்ராஜ்** அவர்கள் திரளான ஜனங்கள் சபையில் சேர்க்கப்பட வேண்டும் என்பதைக் குறித்து உதாரணமாக பர்னபாவையும் அவனுடைய ஊழியங்களையும் அவனுக்குள் இருந்த விசேஷித்த குணாதிசயங்களைக் குறித்தும் மிக நேர்த்தியாக செய்தியளிக்க **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். ஜெப வேளையில் ஊழியர்களும் ஊழியக்காரிகளும் பர்னபாவைப் போல ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணித்து ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பின்பு மறுபடியும் **போதகர். ஜான்ராஜ்** அவர்கள் சபைகளுக்குள்ளே போராட்டங்கள் மற்றும் பிரச்சனைகள் ஏன் வருகிறது எப்படி வருகிறது என்பதைக் குறித்து செய்தியளிக்க, **சகோ. கேரட் அவர்கள்** மொழிபெயர்த்தார்கள். அன்று மாலை சந்தியா வேளையில் ஷாலோம் பயிற்சிக் குழுவினர் மற்றும் அலுவலக ஊழியர்களும் இணைந்து, அப்போஸ்தலனாகிய பவுல் நிறைவேற்றின பரம தரிசனத்தை நாடகமாக மிக நேர்த்தியாக நடித்தார்கள். அதைப் பார்த்த அனைவரும் பவுலைப் போல ஊழியம் செய்து 1 கோடி பீல் மக்களை தேவனண்டை திருப்ப வேண்டும் என ஆவியில் வைராக்கியம் கொண்டு தங்களை அர்ப்பணித்தார்கள். பின்பு ஷாலோம் ஊழியத்தின் மூலம் புதிதாகத் தயாரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் பாடல்கள் மற்றும் **பேராயர். தேவதாஸ்** அவர்களின் செய்தி அடங்கிய ஹிந்தி ஆடியோ சி.டி. Aaya Masiha (கிறிஸ்து வந்தார்) **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களால் ஜெபித்து

பிரதிஷ்டை செய்யப்பட்டு, முதல் இசைத்தட்டு **போதகர். ஜான்ராஜ்** அவர்களுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் சந்தியா வேளையில் எழுப்புதல் வர வேண்டுமென்றால் ஜெபம் தான் அவசியம் என்பதைக் குறித்து செய்தியளித்தார்கள். அதனை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். இறுதியில் அனைத்து ஊழியர் மற்றும் ஊழியக்காரிகளுக்கு தனித்தனியே **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களும் **போதகர். ஜான்ராஜ்** அவர்களும் விசேஷித்த ஜெபம் செய்தார்கள்.

மறுநாள் 30–ம் தேதி காலையில் ஆராதனை வேளையைத் தொடர்ந்து **போதகர். ஜான்ராஜ்** அவர்கள் சபையைக் கட்டி எழுப்புவது எப்படி என்ற தலைப்பில் செய்தியளிக்க, **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழி பெயர்த்தார்கள். அதைத் தொடர்ந்து இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் சார்பாக அனைத்து ஷாலோம் ஊழியர்களின் 550 குடும்பங்களுக்கும் ரூ. 500 மதிப்புள்ள Steel Casserole (Hot Box) வெகுமதியாக அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து முழு வேதாகமத்தில் “துதி மற்றும் ஆராதனை” பற்றிய வசனங்களை மனப்பாடம் செய்து ஒப்பித்த சுதேச ஊழியர்களின் மனைவிமார்கள் 70 பேருக்கு பரிசு வழங்கப்பட்டது. அதன் பின் ஷாலோம் ஊழியத்தில் 2014–ம் ஆண்டின் மிஷன் ஞாயிறு மூலமாக கிடைத்த காணிக்கையிலிருந்து **ரூ. 1 இலட்சம்** இயேசு விடுவிக்கிறார் தேவனுடைய கூடாரத்தின் கட்டுமானப்பணிக்கென்று நமது ஷாலோம் ஊழியத்தின் குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மூலமாக **சகோ.மோகன் சி.லாசரஸ்** அவர்களிடம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து நிறைவு செய்தியாக **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் சிலுவையைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டும் என்று தேவ செய்தியை அளிக்க, தொடர்ந்து ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த திருவிருந்து ஆராதனையை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் **போதகர். ஜான்ராஜ்** அவர்களும் இணைந்து நடத்தினார்கள். ஊழியர்கள் கண்ணீரோடு திருவிருந்தில் பங்கு பெற்று, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள். இறுதி ஜெபத்தையும் ஆசீர்வாதத்தையும் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் கூற ஷாலோம் ஊழியர் குடும்ப முகாம் நிறைவுபெற்றது.

எந்த தடையும் குறையும் இல்லாமல் இந்த முகாமை நடத்த தேவன் கிருபை செய்தார். 4 நாட்களும் கலந்து கொண்ட சுமார் 1200 பேருக்கும் நல்ல உணவு வழங்கப்பட்டது. குறிப்பாக இந்த நாட்களில் மிகப்பெரிய புயல் குஜராத்தை தாக்கும் என்ற நிலை இருந்த போதிலும் தேவன் சில கி.மீ தொலைவிலிருந்தே அந்த புயல் வேறு வழியாக கடந்து செல்லும்படியாக இரக்கம் பாரட்டினார். கர்த்தர் ஷாலோம் ஊழியத்தோடு கூட இருக்கிறார் என்பதை தேவன் நிரூபித்தார். **தேவனுக்கே மகிமை!**

இந்த முகாமின் செலவுகள் மற்றும் ஊழியர்களின் வெகுமதிகளுக்கான செலவுகள் மொத்தம் ரூ. 7.5 இலட்சம் இயேசு விடுவிக்கிறார் ஸ்தாபனத்தின் மூலம் வழங்கப்பட்டது. ஷாலோம் ஊழியப்பங்காளர்கள் ஜெபத்தின் மூலம் மற்றும் காணிக்கையின் மூலம் இந்த முகாமிற்கு உதவி செய்தார்கள். அவர்கள் அனைவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக! 2020–ம் வருடத்திற்குள்ளாக முழு பீல் மக்களும் சந்திக்கப்படும்படியாகவும், சுவிசேஷம் அறிவிக்கப்படாத மற்ற மாவட்டங்களுக்கும் சுவிசேஷம் கொண்டு செல்லும்படியாகவும் விசேஷித்த பாரத்தை ஊழியர்கள் பெற்று தங்கள் பணித்தளத்திற்கு திரும்பினார்கள்.

## சகோ. R.D சுந்தர்சிங் & சகோதரி. சாந்தா சுந்தர்சிங்

**(இயேசுவின் ஊழியங்கள் நெய்யாட்டின்கரை, கேரளா) அவர்களின் பணித்தள ஊழிய அறிக்கை.**

தேவ கிருபையால் நானும் என் மனைவியும் எங்கள் அன்பு மகன் அபிஷேக் (2 1\2 வருடம்) மூவருமாக நவம்பர் 12–16 வரை பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் பணித்தளங்களை 3 மாநிலங்களில் காணவும் ஊழியங்களை நிறைவேற்றவும் தேவன் கிருபை தந்தார். தேவ கிருபையால் இயேசுவின் ஊழியங்கள் மூலமாக மத்தியப்பிரதேசம் ஜாபுவா மாவட்டத்தில் காக்ராடுங்கரா, சாரேல், சஜேலி மற்றும் இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் போர்குண்டா ஆகிய 4 ஆலயங்களை பேராயர் தேவதாஸ் அவர்கள் தலைமையில் ஜெபித்து பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார். ஆலயம் நிரம்ப தேவ ஜனங்கள் வந்து ஆராதித்து துதித்து வசனங்களைக் கேட்டு அர்ப்பணித்தார்கள். தேவனுக்கே மகிமை!

மேலும் 13.11.2014 வியாழன் அன்று மத்தியப்பிரதேசம் ஜாபூல்பூரா மாவட்டம் காளாகேத் கிராமத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நற்செய்தி கூட்டத்தில் சுமார் 2000 பேர்கள் பங்கு பெற்றார்கள். வசனத்தை பிரசங்கிக்கும் போது ஆவியானவர் இறங்கி வந்து அநேகர் விடுதலை மற்றும் அபிஷேகம் பெற்றார்கள். 14.11.2014 வெள்ளி அன்று குஜராத் மாநிலத்தில் தாகோத் மாவட்டத்தில் கங்கேலா கிராம சபையில் நானும் பாட்டன்பூரா சபையில் என் மனைவி சாந்தா சுந்தர்சிங்கும் தேவ செய்தியை கொடுத்தோம். ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

15.11.2014 சனிக்கிழமை அன்று இராஜஸ்தானில் 250 ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்கான சிறப்பு கூடுகை நடைபெற்றது. நானும் என் மனைவியும் தேவசெய்தி அளித்தோம் ஊழியர்கள் மீது அக்கினி அபிஷேகத்தை தேவன் ஊற்றினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. தேவ கிருபையால் அந்தர்வேலியா, தெல்வர், வரம்கேடா பணித்தளங்களை பார்வையிட தேவன் கிருபை தந்தார். 4 நாட்கள் ஆலய பிரதிஷ்டைகள் பணித்தள ஊழியங்கள், பிரயாணம், தங்கும் வசதி, உணவு அனைத்தையும் நேர்த்தியாக ஒழுங்கு செய்தார்கள். தேவனுக்கே மகிமை!

ஷாலோம் ஊழியங்களைக் காணும் போது வலதுகைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத ஜனங்கள், குடித்து, திருடி, பிசாசின் பிடியில் சிக்கி மிகவும் பின்தங்கி உள்ள கிராமங்களில் வாழும் இந்த ஜனங்களை இரட்சிப்புக்குள் நடத்தி சீஷராக்கி முழுநேர ஊழியர்களாக்கி 650 சபைகளை 23 வருடங்களில் உருவாக்கியதைக் கண்டு தேவனை துதித்தோம். இது பீல் மக்களுக்காக தேவனுடைய தரிசனமும் திட்டமான அழைப்பும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த பீல் சுதேச ஊழியர்கள், போதகர்கள் சபைகளை நடத்திச் செல்லும் விதம், விசுவாசிகள் ஆவியில் நிறைந்து நடனமாடி துதிப்பதும், அபிஷேகத்தில் நிறைந்து சாட்சியாக வாழ்வதை கண்டு எங்கள் ஆவியில் மகிழ்ந்து களிகூர்ந்தோம். இதற்காக தேவன் பயன்படுத்தும் பாத்திரங்கள் பேராயர் தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் அன்பு மகன் டைட்டஸ் குடும்பத்திற்காகவும் ஷாலோம் குடும்பத்தில் உள்ள ஊழியர்களுக்காகவும் தேவனைத்துதிக்கிறேன்.

2020–ம் ஆண்டுக்குள் இன்னும் பல ஆயிரம் சபைகள் ஆயிரம் சுதேச ஊழியர்கள் எழும்பி முழு பீல் சமுதாயத்தை தேவனண்டை வழிநடத்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஷாலோம் ஊழியங்கள் மேன்மேலும்வளர இயேசுவின் ஊழியங்கள் மூலமாக ஜெபித்து இன்னும் தாங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். இதை வாசிக்கும் தேவ ஜனமே, ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபித்து கொடுக்கும் ஒவ்வொரு பணமும் வீணாக போகவில்லை. அது நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டுள்ளது. அதன் பலனை பீல் மக்கள் மட்டுமல்ல நீங்களும் பலமடங்காக பெற்றுக் கொள்வீர்கள் என்பதில் சந்தேகமில்லை. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

தேவனுடைய சுவிசேஷப் பணியில்

**R. D. சுந்தர்சிங்**

இயேசுவின் ஊழியங்கள் நெய்யாட்டின்கரை, கேரளா.

**சகோ. R. D. சுந்தர்சிங் அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயங்களின் அறிக்கைகள்**

### சஜேலி (பயிடா) கிராம ஆலயம் (ஜாபுவா, மத்தியப்பிரதேசம்)

மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் சஜேலி (பயிடா) என்ற கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் நமது ஷாலோம் ஊழியர் பிரகாஷ் டாமோர் மூலம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 55 குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகிறார்கள். தற்போது புதிய ஆலயம் கட்டப்பட்டு **சகோ. R.D. சுந்தர்சிங்** (நெய்யாட்டின்கரை) அவர்கள் மூலம் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### சாரேல் கிராம ஆலயம் (ஜாபுவா, மத்தியப்பிரதேசம்)

மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் சாரேல் என்ற கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் நமது ஷாலோம் ஊழியர் ஹீர்சிங் புரியா மூலம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 72 குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகிறார்கள். தற்போது புதிய ஆலயம் கட்டப்பட்டு **சகோ. R.D. சுந்தர்சிங்** (நெய்யாட்டின்கரை) அவர்கள் மூலம் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### காக்ரா டுங்கரா கிராம ஆலயம் (ஜாபுவா, மத்தியப்பிரதேசம்)

மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் காக்ராடுங்கரா என்ற கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் நமது ஷாலோம் ஊழியர் பாலுசிங் பாரியா மூலம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 28 குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகிறார்கள். தற்போது புதிய ஆலயம் கட்டப்பட்டு **சகோ. R.D. சுந்தர்சிங்** (நெய்யாட்டின்கரை) அவர்கள் மூலம் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### போர்குண்டா கிராம ஆலயம் (பான்ஸ்வாடா, இராஜஸ்தான்)

இராஜஸ்தானிலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்தில் போர்குன்டா என்ற கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் நமது ஷாலோம் ஊழியர் பர்த்து டின்டோடு மூலம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 32 குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகிறார்கள். தற்போது புதிய ஆலயம் கட்டப்பட்டும், **சகோ. R.D. சுந்தர்சிங்** (நெய்யாற்றங்கரை) அவர்கள் மூலம் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## சகோ. R. D சுந்தர்சிங் & சகோதரி. சாந்தா சுந்தர்சிங்

(இயேசுவின் ஊழியங்கள் நெய்யாட்டின்கரை, கேரளா) அவர்களின் பணித்தள ஊழியங்கள்




பாட்டன்புரா (குஜராத்) கிராம சபையில் சிறப்புக் கூடுகையில் செய்தி & ஆராதனை



செய்திவேளை – காளகேத் (ம.பி.) கிராம ஆலயம்



காளகேத் (ம.பி) கிராம ஆலயத்தில் கூடியிருந்த தேவ ஜனங்கள்



கங்கேலா (குஜராத்) கிராம சபையில் செய்தி வேளை



கங்கேலா கிராம சபையில் கூடியிருந்த வே ஜனங்கள்




இராஜஸ்தான் ஊழியர் கூடுகையில் செய்திவேளை



இராஜஸ்தான் ஊழியர் கூடுகையில் டங்கேற்ற ஊழியர்கள்

## சகோ. R.D சுந்தர்சிங் அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயங்கள்



**சஜேலி (பயிடா)**
**கிராம ஆலயம்**
ஜாபுவா, மத்தியப்பிரதேசம்



**காக்ரா டுங்கரா**
**கிராம ஆலயம்**
ஜாபுவா, மத்தியப்பிரதேசம்









**சாரேல்**
**கிராம ஆலயம்**
ஜாபுவா, மத்தியப்பிரதேசம்



**போர்குண்டா**
**கிராம ஆலயம்**
பான்ஸ்வாடா, இராஜஸ்தான்











# ஷாலோம் பீல் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாம் - 2014


தேவ ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட கலாச்சார வரவேற்பு


ஆராதனை வேளையை நடத்தும் Pr. டேனியல் குழுவினர்


கலாச்சார நடனம்


அலுவலக ஊழிய சகோதரர்களின் சிறப்புப் பாடல்


அலுவலக ஊழிய சகோதரிகளின் சிறப்புப் பாடல்



பவுன் பரம தரசனம் – நாடகம்


CDC ஜெரி மாணவர்களின் நடனம்


சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகளுடன்


அக்கினி அபிஷேக வேளை


கர்த்தருடைய பந்தி


இயேசு விடுவிக்கிறார், தேவனுடைய கூடாரத்திற்கு
கொடுக்கப்பட்ட சிறப்பு காணிக்கை


ACD வெளியீடு


அன்பளிப்பினைப் பெறும் சுதேச ஊழியர் குடும்பம்


மனப்பாட வசனம் ஒப்பிக்கும் தேர்வில் வெற்றிப் பெற்ற
சுதேச ஊழியர் மனைவிமாருக்கு சிறப்புப் பரிசுகள்


சாட்சி வேளை


ஷாலோம் பீல் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாம் - 2014
தேவன் பயன்படுத்திய பாத்திரங்கள்
சொந்த பீல் மக்களின் இரட்சிப்பிற்காக
ஜெபிக்கும் சுதேச ஊழியர் குடும்பங்கள்

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை
## 26.10.2014 - மார்த்தாண்டம் (K.K. Dist)




மிஷனெரி பிரதிஷ்டை வேளை



மிஷனெரிக்கு அன்பளிப்புகள் வழங்கப்படுகின்றன.



மிஷனெரியைத் தாங்கும் குடும்பத்தாருடன்

## மிஷனெரிகள் பிரதிஷ்டை ஆராதனை
## 14.11.2014 - பனவிளை, வேங்கோடு (K.K. Dist)



மிஷனெரிகளின் அறிமுகவேளை



மிஷனெரிகளின் சாட்சி வேளை



மிஷனெரிகளின் பிரதிஷ்டைவேளை



மிஷனெரிகளுக்கு வழங்கப்படும் அன்பளிப்புகள்

## சகோ. ஜெயசிங் குடும்பத்தாரின் *(D.S. Group, Chennai)* பணித்தள வருகை



அந்தர்வேலியா (ம.பி.) கிராமத்தில் கலாச்சார வரவேற்பு



அந்தர்வேலியா (ம.பி.) கிராம ஆலயத்தில் ஆராதனை வேளை



டிக்கிடி (ம.பி.) கிராமத்தில் கலாச்சார வரவேற்பு



கட்டப்பட்டு வரும் புதிய டிக்கிடி கிராம ஆலயம்



செய்திவேளை – சகோ. ஜெயசிங்



சிறப்புப் பாடல் – சகோதரி பெத்ஸியா



தெல்சர் (குஜராத்) கிராம ஆலயத்திற்கு முன்பு



போரடி (குஜராத்) கிராம ஆலயத்தில்

# சகோ. ஜெயசிங் குடும்பத்தாரின் (D.S. Group, Chennai) பணித்தள வருகை அறிக்கை

தேவனுடைய பெரிதான கிருபையால் ஷாலோம் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் 23 வருடங்களாக நடைபெறும் ஊழியங்களைக் குறித்து 4 வருடங்களாக கேள்விப்பட்டு, ஜெபித்து தாங்கி வருகிறோம். ஒவ்வொரு முறை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் எங்கள் ஆலயத்திற்கு வரும்போதும், எங்கள் இல்லத்திற்கு வரும்போதும் பணித்தளத்தை பார்வையிட வரும்படிக்கு அழைப்பார்கள். இந்த முறை நாங்கள் மும்பையில் நடைபெற்ற FMPB கூட்டத்திற்கு வந்தபோது ஷாலோம் ஊழியத்தையும் பார்க்க வேண்டும் என்கிற ஆவலோடு ஒரே ஒரு நாள் 17.11.2014 அன்று பணித்தளத்திற்கு சென்றோம்.

குஜராத்திலுள்ள தெல்சர், போரடி, தனசியா ஆகிய கிராம ஆலயங்களையும், ஊழியர் குடும்பங்களையும் கண்டு தேவனை மகிமைப்படுத்தினோம். அதன் பின் காடுகள், மலைகள், ஆறுகள் இவையெல்லாவற்றையும் கடந்து மத்தியப்பிரதேசத்திலுள்ள காளாகேத், நவப்பாடா, பத்ரா ஆகிய ஆலயங்களைப் பார்வையிட்டோம். அதைத் தொடர்ந்து அந்தர்வேலியா கிராம ஆலயத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பங்குபெற்றோம். அந்தக் கிராமத்தில் ஆரம்ப நாட்களில் காணப்பட்ட எதிர்ப்புகள், அதினிமித்தம் பட்ட பாடுகள், வாகனம் எரிக்கப்பட்டதைக் குறித்து எங்களிடம் பகிர்ந்துக் கொண்டார்கள். ஆனால், தற்போது இந்த சபை தாய் சபையாக இருப்பதைக் குறித்தும், அந்த பகுதியில் 50 சபைகள் உருவாகியிருப்பதைக் குறித்து கேள்விப்பட்டு நாங்கள் தேவனை மகிமைப்படுத்தினோம். அங்கு ஊழியம் செய்யும் **போதகர். புர்சன் புரியா** அவர்களின் குடும்பம் தியாகத்தோடு ஊழியம் செய்கிறதின் மூலம் இன்றைக்கு 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சபையில் தேவனை ஆராதித்து வருகிறார்கள். மேலும் 300 சிறு பிள்ளைகளுக்கு Compassion Project நடத்தப்படுகிறது என்பதைக் குறித்து கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்தோம். அங்கு எங்களுக்கு கொடுத்த வரவேற்பு எங்களை மிகவும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது.

அதைத் தொடர்ந்து எங்கள் குடும்பத்தின் மூலம் தாங்கப்பட்டு கட்டப்பட்டு வரும் டிக்கிடி (ம.பி) ஆலயக் கட்டுமானப் பணியைக் காண்பதற்கு ஆண்டவர் கிருபை செய்தார். அந்த சபையினர் எங்களுக்காக காத்திருந்து எங்களுக்கு காட்டின அன்பின் வரவேற்பு எங்களுக்கு சந்தோஷமாக இருந்தது. அங்கு கூடியிருந்த மூப்பர்கள் அனைவருடன் இணைந்து ஆலயக் கட்டுமான பணியின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தோம். அந்த சபையின் போதகர். ராலுசிங் ஹட்டிலா அவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஜெபித்தோம். தொடர்ந்து அந்த பகுதியில் உள்ள பாடல்வா கிராமத்தில் கட்டப்பட்டுள்ள பெரிய ஆலயத்தைப் பார்வையிட்டு இரவு வீடு திரும்பினோம்.

நாங்கள் இந்த கிராமங்கள் வழியாக கடந்து செல்லும்போது அங்குள்ள வீடுகள், சாலைகள், கரடுமுரடான பாதைகள் இவைகளை காணும்போது முதலில் எங்கள் மனதில் பேராயர். தேவதாஸ், **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் 23 வருடங்களுக்கு முன் அர்ப்பணித்து வந்த

போது எவ்வாறு நடந்து சென்று, சைக்கிளில் சென்று ஊழியம் செய்திருப்பார்கள் என்று நினைத்த போது கண்களில் கண்ணீரோடு தேவனுக்கு நன்றி செலுத்தினோம். மேலும் இந்த ஏழை ஜனங்களின் வீட்டிற்கு சென்று நாங்கள் பார்த்தோம். அங்கு ஆடு, மாடு, கோழிகளோடு அவர்கள் படுத்து உறங்கி வாழுகின்ற வாழ்க்கை முறையைப் பார்த்தோம். இந்த ஒரு நாள் நாங்கள் எவ்வளவோ மைல் தூரம் பிரயாணம் செய்தோம். ஆனால் கிராமங்களில் ஒரு பேருந்தைக் கூட நாங்கள் பார்க்கவில்லை. பேருந்து வசதியில்லாமல், மின்சார வசதி இல்லாமல் இருக்கும் இந்த பாமர ஜனங்களை நேசித்து சகோதரரின் குடும்பம் அர்ப்பணித்து வந்ததைக் குறித்து ஆச்சரியப்பட்டோம்.

இந்த 23 வருடங்களில் இந்த பீல் ஆதிவாசி மக்களை மனிதர்களாக உருவாக்கி, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறியதின் நிமித்தம் அவர்களுடைய வாழ்க்கை முறை மாறியிருக்கிறது. குறிப்பாக மந்திரவாதிகள், குடிகாரர்கள், சண்டை போடுகிறவர்கள் இயேசுவண்டை வந்திருப்பது வியக்கத்தக்கது. அதிலும் அவர்களையே ஊழியர்களாக உருவாக்கியிருப்பதைக் குறித்து நினைக்கும்போது தேவனை அதிகமாக மகிமைப்படுத்தினோம். மேலும் இந்த மக்கள் தேவனை ஆராதிக்கும் முறை எங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. நம்மைப் போல பாரம்பரியமாக ஆராதிக்காமல் விடுதலையோடு நடனமாடி தேவனை துதிக்கிறார்கள். ஆராதனை வேளையில் பயபக்தியோடு இயேசுவை நேசித்து ஆராதிக்கிறார்கள். 3 வயது குழந்தை கூட கண்களை மூடி கரங்களை உயர்த்தி தேவனை ஆராதிப்பதைப் பார்த்த போது நாங்கள் மெய்சிலிர்த்து போனோம். வேதாகமத்தில் அப்போஸ்தலனாகிய பேதுரு படிப்பறிவில்லாத போதும் தேவன் அவரை எப்படி பயன்படுத்தினாரோ அதைப்போல படிப்பறிவில்லாத இந்த ஜனங்களை ஊழியர்களாக உருவாக்கி தேவன் பயன்படுத்தும்விதம் வியக்கத்தக்கது.

2020–க்குள் முழு பீல் மக்களையும் இரட்சிப்புக்குள் நடத்த வேண்டும் என்ற மிகப்பெரிய தரிசனத்துடன் பேராயரின் குடும்பம் ஊழியம் செய்து வருகிறார்கள். அவர்கள் தலைமுறையில் இந்த 1 கோடி பீல் ஆதிவாசி மக்களும் இரட்சிக்கப்படுவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. நாங்கள் புறப்படுவதற்கு முன் பணித்தள அலுவலகத்தைப் பார்வையிட சென்றபோது அங்கு பெண்கள் கூடி அந்நிய பாஷையில் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். அது எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. சுதேச ஊழியர்களின் பிள்ளைகளை பார்க்கும் போது எந்த வசதியும் இல்லாத கிராமத்திலிருக்கும் அவர்களை படிக்க வைக்கிறார்கள் என்பது மிகவும் பாராட்டத்தக்கது.

ஷாலோம் ஊழியம் அழைக்கப்பட்ட தரிசனம் பெற்ற ஊழியம். இதை வாசிக்கிற நீங்கள் இந்த ஊழியங்களுக்காக முழு மனதோடு ஜெபிக்க வேண்டும், தாங்க வேண்டும், கல்விப் பணிக்கு உதவி செய்ய வேண்டும், ஆலயம் கட்டிக் கொடுக்க வேண்டும். நம்மால் முடிந்த வரை ஜெபித்து தாங்க வேண்டும் என உங்களை அன்பாய் கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் குடும்பமாக பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியத்தை பார்வையிட்ட இந்த நாள் எங்கள் வாழ்வில் மறக்கமுடியாத நாளாகும். **தேவனுக்கே மகிமை!!**

## *மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை – 26.10.2014*
## *(மார்த்தாண்டம்,* K.K. Dist.*)*

தேவனுடைய பெரிதான கிருபையினால் கன்னியாகுமரி மாவட்டம், பயணம், CSI ஆயர்மண்டல சபை குடும்பவிழா **26.10.2014** அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. தன்னா சர்ப்போட்டா** அவர்கள் குடும்பமாக பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இந்த பிரதிஷ்டை ஆராதனை **Rev. D. ஜஸ்டின் தேவதாசன்** (சேகரத் தலைமை ஆயர், மார்த்தாண்டம்) அவர்கள் தலைமையிலும், **Rev. G. சதிலால் விஜின்** (திருச்சபை ஆயர்) அவர்கள் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது. சுதேச ஊழியர் தனது அனுபவ சாட்சியினை பகர **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் மொழிபெயர்த்ததோடு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்துக் கொண்டார்கள். மேலும் **சகோ. செல்வதுரை** அவர்களும், **சகோ. ஜாண் ஸ்ரீதர்** அவர்களும் வாழ்த்துரை கூறினார்கள்.

இந்த ஊழியரைத் தாங்க முன்வந்த **சகோ. K. தங்கராஜ்** அவர்கள் குடும்பத்திற்காகவும், மற்றும் சபை குருவானவர் மற்றும் சபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

## *மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை – 14.11.2014*
## *(பனவிளை, வேங்கோடு,* K.K. Dist.*)*

தேவனுடைய பெரிதான கிருபையினால் கன்னியாகுமரி மாவட்டம், பனவிளை, வேங்கோட்டைச் சேர்ந்த நமது ஷாலோம் ஆதரவாளர் **சகோ. பிரபின் பென்னட்** அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற பிறந்த நாள் விழாவின் போது நமது ஷாலோம் ஊழியர்கள் 3 பேர் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். இந்த நிகழ்ச்சியினை **சகோ. செல்வதுரை** அவர்கள் தொகுத்து வழங்க, **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் சுதேச ஊழியர்களை அறிமுகம் செய்தார்கள். அதைத் தொடர்ந்து சுதேச ஊழியர்கள் தங்களது சாட்சியினை பகிர்ந்து கொள்ள அதை **சகோ. டேவிட்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அதன்பின் **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் ஜெபிக்க **சகோ. பிரேம் குமார்** அவர்கள் தலைமையில் சுதேச ஊழியர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். அதனைத் தொர்ந்து **Prof. C.S. கிறிஸ்டோபர்** அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த ஊழியரைத் தாங்க முன்வந்த **சகோ. பிரபின் பென்னட்** அவர்கள் குடும்பத்திற்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவன்தாமே அவர்களையும் அவரது குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

**பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்களின் விபரம் பின்வருமாறு :**

1. **சகோ. பிரேம்சந்த் மெய்டா**, உம்ராதாரா, மத்தியப்பிரதேசம்
2. **சகோ. மங்கு K. புரியா**, பாட்டன்பூர், குஜராத்
3. **சகோ. கேம்சந்த் பாபோர்**, கனோகரா, இராஜஸ்தான்

மேற்கண்ட மிஷனெரி பிரதிஷ்டைகளுக்கான புகைப்படங்களை 22ம் பக்கம் பார்க்கவும்

# ஞாபகப்படுத்துகிறோம்



***அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு,***

அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாகப் படித்தும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தும் வருகிறார்கள்.

பீல் ஆதிவாசி சிறுவர்களின் கல்வி மற்றும் கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்தக் காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

அதோடு பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காகக் கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்தும் கொடுக்கலாம். அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHALOM CHARITY MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். நீங்கள் உண்டியலைத் திறக்க உங்களுக்கு சாவி **(Key)** வேண்டுமானால் ***9698944522*** என்ற செல் நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

## *உங்களுக்காக ஜெபிக்கிறோம்...*



**அன்பான ஆதரவாளர்களே!** உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் உங்களது ஜெபக் குறிப்புகளை **அன்பு பகிர்வு இயக்கம்** தலைமை அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தினால் நாங்கள் உங்களுக்காக விசேஷமாக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

**தொடர்புக்கு : போன் : 9698044522**

## ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா?

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

உங்கள் கரங்களில் கிடைக்கும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் ஆத்துமப் பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசனப் பணியான மிஷனெரிப் பணித்தளச் செய்திகளையும், தேவனுடைய வார்த்தைகளையும், ஜீவனுள்ள சாட்சிகளையும், மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது. இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து, உழைத்து, அநேகச் செலவுகளைச் செய்து அனுப்புகிறோம்.




இந்த தரிசனப்பணியை, தேவன் பேரில் கொண்ட அன்பின் நிமித்தமாக, தியாகத்துடனும், ஆத்துமப் பாரத்துடனும் மாதந்தோறும் / வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். இப்படி ஜெபித்து, ஊழியங்களைத் தாங்கிவரும் ஆதரவாளர்கள் மாதந்தோறும் ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும், மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது. ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ, இந்த பத்திரிக்கைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லை.

பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் மிஷனெரி ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக, இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் **இந்த வருடத்தில் ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லையெனில், தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி, ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான ரூ. 100/– ஐ அனுப்ப வேண்டுகிறோம்.**

அப்படியாக நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை, குறிப்பாக இந்த மே மாதத்திற்குள்ளாக காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம். **“அப்படி நீங்கள் காணிக்கை அனுப்பாத பட்சத்தல், நிதி நெருக்கடியின் காரணத்தினால் எங்களால் தங்களுக்கு 2015 -லிருந்து பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்”.**

நீங்கள் அனுப்பும் தியாகமான காணிக்கைக்கையை நாங்கள் வரவேற்கிறோம், உங்கள் குடும்பத்தையும், சந்ததியையும் தொடர்ந்து தேவன் ஆசீர்வதிப்பாராக

– பேராயர். வே. தேவதாஸ்

---

**“... சுவிசேஷ விஷயத்தில் என்னோடுகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது”. பிலி. 4:3.**

### *தேவனுக்கே மகிமை*

தேவனுடைய பெரிதான கிருபையினால் முதலூர், CSI தூய மிகாவேல் சகல தேவ தூதர்களின் ஆலயத்தில் 26.10.2014 அன்று நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்கள் பங்கு பெற்றனர். இதில் **சகோ. டேவிட்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டதோடு, தேவனுடைய செய்தியையும் வழங்கினார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Rev. மோசஸ் ஜெபராஜ்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

### *தேவனுக்கே மகிமை*

தேவனுடைய பெரிதான கிருபையினால் சென்னை, தாம்பரத்தில் IT Fellowship - Holy Ghost Fire Revival Ministry **–** மூலமாக **08.11.14** அன்று நடைபெற்ற உபவாச ஜெபத்தில் நமது ஷாலோம் திருமண்டல பேராயர் **பிஷப். வே. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்ததோடு, தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்தார்கள். செய்தியின் மூலம் அநேகர் தொடப்பட்டனர். மேலும் **IT Fellowship** சார்பில் நமது பணித்தளத்தில் ஆலயம் கட்ட முன்வந்து காணிக்கை அளித்தனர். இந்தக் கூடுகையை ஒழுங்கு செய்து பேராயர் அவர்களை அழைத்து பயன்படுத்திய **சகோ. ஸ்டாலின்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்!

### *தேவனுக்கே மகிமை*

சென்னை, வலசரவாக்கம், பெத்தானி கிறிஸ்து ஆலயத்தில் கடந்த **09.11.2014** அன்று நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது பேராயர் **பிஷப். வே. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்தார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபைப் போதகர் **Pr. அருள் பிரகாசம்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

### *தேவனுக்கே மகிமை*

தேவனுடைய பெரிதான கிருபையினால் தூத்துக்குடி மாவட்டம் திம்மராஜபுரம், CSI தூய பவுலின் ஆலயத்தில் **16.11.2014** அன்று நடைபெற்ற ஞாயிறு துதி ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்கள் பங்கு பெற்றனர். இதில் **சகோ. ஜாண்சன் ஜெபராஜ்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளையை நடத்தியதோடு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின் **சகோ. சாமுவேல்** அவர்கள் தேவ செய்தியினை வழங்கினார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகருக்காகவும், சபை ஊழியருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

---

**''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?.'' 1 கொரி. 6 : 19**

---

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பிற்காக.**

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்ப நலனுக்காக.**

✞ **பேராயர். தேவதாஸ்,** அவர்களின் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்குத் தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பப்படவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தைப் பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாகப் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**கிராம ஆலயங்களுக்காக**

✞ தேவன் தந்த தரிசனத்தின்படி, பீல் ஆதிவாசி ஜனங்களின் மத்தியில் இந்த 2014 ஆம் ஆண்டிற்குள்ளாக 100 கிராம ஆலயங்களைக் கட்டும் தேவ பணியில் ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். இதற்கு எதிராக வரும் தடைகளை தேவன் நீக்கும்படியாகவும், இதற்கான தேவைகளைச் சந்திக்க தேவன் ஆதரவாளர்களை எழுப்பித் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் வெள்ளிதோறும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக**

✞ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள். இந்த ஆராதனைகளில் உடலிலும் மனதிலும் குறையுள்ள ஜனங்கள் அநேகர் பங்குபெறவும், இதன் மூலம் அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு தேவனண்டையில் சேர்க்கப்படவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காக ஜெபிப்போரும் ஊழியங்களைத் தாங்குவோரும் எழுப்பப்பட**

✞ தேவன் தந்த தரிசனத் திட்டமான ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பின் பணியில் நடைபெறும் இந்த மாபெரும் ஊழியத்தினை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஜெபப் பங்காளர்களை ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்டங்களிலும் எழுப்பவும், இந்த மாபெரும் திட்டப்பணியின் தேவைகள் சந்திக்கப்பட அநேக ஆதரவாளர்கள் மற்றும் ஊழிய பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பரிசுத்த வேதாகமங்களின் தேவைகளுக்காக**

✞ தேவ கிருபையால் பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் இறுதிக்குள்ளாக இன்னும் 2000 வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதாகமத்திற்கு ஆகும்

செலவு ரூ. 100 வீதம் 2000 வேதாகமங்களுக்கு தேவைகளான ரூ. 2/– இலட்சங்கள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின் மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷனின் வளர்ச்சிக்காக.**

✞ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து வழி நடத்தும்படியாக ஜெபியுங்கள்.

**ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காக**

✞ பணித்தளத்தில் செயல்பட்டு வரும் **ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காகவும்**, அதில் பொறுப்பேற்றுள்ள **Dr. இன்பக்குமார்** அவர்களுக்காகவும், இந்த மருத்துவமனை மூலம் அநேக ஏழை ஆதிவாசி ஜனங்கள் பயனடையவும், இதன் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட்டு, தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் தலைமை மற்றும் கிளை அலுவலகங்களுக்காக**

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

**புதிய நாகர்கோவில் ஷாலோம் கிளை அலுவலகத்திற்காக**

✞ நாகர்கோவிலில் புதிதாய் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளை அலுவலகத்தை தேவன் ஆசீர்வதிக்கவும், அங்கு பணிபுரியும் தேவ பிள்ளைகளை தேவன் ஆசீர்வதிக்கவும், மேலும் அநேக தேவ ஜனங்கள் வந்து ஜெபித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும், இந்த அலுவலகம் பீல் மக்களின் இரட்சிப்பின் பணியில் ஒரு தூணாய் விளங்கவும் ஜெபியுங்கள்.

**கிறிஸ்துமஸ் மேளாவிற்காக**

✞ அனைத்து ஷாலோம் சபைகளில் நடைபெற உள்ள கிறிஸ்துமஸ் பண்டிகை ஆராதனைகளுக்காகவும், கிராமங்கள் தோறும் நடைபெற உள்ள கிறிஸ்துமஸ் கீத ஆராதனைகள் மற்றும் நற்செய்தி அறிவிக்கும் திட்டங்களுக்காகவும், விசேஷமாக கிறிஸ்துமஸ் மேளாவிற்காகவும், அனைத்து ஆயத்தங்களுக்காகவும் ஜெபியுங்கள். குறிப்பாக இதற்கெனத் தேவைப்படும் ரூ.15 இலட்சம் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

---

**''அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்'' -ரோமர் 12 : 11**

# அருள்திரு. ஜாண் தாமஸ்

இங்கிலாந்து தேசத்தில், தாமஸ் – பிரான்ஸஸ் என்ற தம்பதியருக்கு 3வது மகனாக 1807 ஆம் ஆண்டு நவம்பர் 10ம் தேதி **ஜாண் தாமஸ்** பிறந்தார். அவர் தம் வாலிப வயதில் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஊழியத்திலும் நாட்டம் கொண்டார். வேல்ஸ் நாட்டிலுள்ள லம்ப்வி என்ற சிறிய கிராமத்திலுள்ள சபைக்கு **ஜாண் தாமஸ்** சென்றபோது, அங்கு **அருள்திரு. பயர்ஸ்** அவர்களது பிரசங்கத்தைக் கேட்டு தன் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தார். அந்த ஆலயத்திலுள்ள பாடகர் குழுவில் சேர்ந்து பாட்டுகள் பாடுவதிலும், ஓய்வுநாள் பாடசாலை நடத்துவதிலும் அதிக ஆர்வம் கொண்டார். அருள்திரு. பயர்ஸ் அவர்களுக்கு மிகவும் உதவியாகவும் இருந்து வந்தார்.

1830ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய மிஷனெரி ரிஜிஸ்டர் அவருடைய கையில் கிடைத்தது. அதில் உலகின் பல்வேறு இடங்களில் மிஷனெரி ஊழியம் செய்தவர்களின் குறிப்பு இருந்தது. அப்போது இந்தியாவில் திருநெல்வேலி பகுதியில் மிஷனெரிகளாய் இருந்த **ரேனியேஸ் & ஸமிட்** என்பவர்களின் ஊழியங்களைப் பற்றிய அறிக்கைகளும் அதில் தெளிவாக அதில் இருந்தன. இதை வாசித்தவுடன் தானும் ஒரு மிஷனெரியாகச் சென்று ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை கொண்டார்.

1836ஆம் ஆண்டு இந்தியாவுக்கு மிஷனெரியாக கப்பலில் புறப்பட்டார். அந்த ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று சென்னை வந்திறங்கினார். 1837ல் பாளையங்கோட்டைக்கு வந்து **அருள்திரு. பெற்றிட் ஐயரவர்களுக்கு** உதவி செய்தார். அநேக சபைகளில் விசுவாசிகளை சந்தித்துவிட்டு, 1937 டிசம்பர் 25 கிறிஸ்துமஸ் தினத்தில் நெல்லை மாவட்டத்திலுள்ள மெஞ்ஞானபுரத்திற்கு வந்தடைந்தார். இதற்குள் ஒரு வருடம் முடிந்துவிட்டது. 1838ல் ஜாண் தாமஸ் மேரி டேவிஸை திருமணம் செய்து கொண்டார். 1939 ஆம் ஆண்டு மெஞ்ஞானபுரத்தில் மிஷனெரி பங்களாவை கட்டிமுடித்துவிட்டு அதில் குடியேறினார். ஜாண் தாமஸ் மேரி தம்பதியருக்கு ஜாண் டேவிஸ் என்ற மகனும், மேரி ஜேன் என்ற மகளும் அடுத்தடுத்து பிறந்தனர்.

1844 ஆம் ஆண்டு டக்கர் ஐயர் அவர்கள் மெஞ்ஞானபுரம் ஆலயத்திற்கு அஸ்திபாரக் கல் நாட்டினார். மேலும் பெண்கள் பள்ளிக்கூடத்தின் பிரதான கட்டிடத்துக்கும் அஸ்திபாரமிட்டு அப்பள்ளிக்கு **மேரி எலியற் டக்ஸ் போர்ட்** என்ற பெயரிட்டு ஆசீர்வதித்தார்.

ஜாண் தாமஸ் அவர்கள் ஒரு ஆண்கள் விடுதியுடன் கூடிய பள்ளியும் நிறுவி மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதோடு, ஊழியத்திற்கேற்ற பயிற்சியும் கொடுத்துவந்தார். ஜாண்தாமஸ் ஐயர் அவர்கள் மெஞ்ஞானபுரத்தை அழகு தோற்றம் அளிக்கும் வண்ணம் சீரமைத்தார். சீரான அகன்ற நேர்த்தியான தெருக்களையும் அதன் இருகரையிலும் நிழல் தரும் மரங்கள், குறிப்பாக தென்னை மரங்களையும் நட்டு வளர்த்திட ஒழுங்கு செய்தார். இன்றும் மெஞ்ஞானபுரத்தின் அழகு தோற்றத்தைக் காணலாம். 1847ல் மெஞ்ஞானபுரம் ஆலயம் கட்டப்பட்டு தேவ மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. தாமஸ் ஐயரவர்களின் அயராத உழைப்பால் மெஞ்ஞானபுரம் மட்டுமல்ல அதன் சுற்று வட்டாரத்திலுள்ள கிளை சபைகள் உருவாயின. மக்களின் நடை உடைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது.

1870ஆம் ஆண்டு ஜாண் தாமஸ் அவர்கள் சுகவீனத்தோடு பாளையங்கோட்டை **சார்ஜெண்ட் ஐயரவர்களோடு** போய் தங்கினார். அவரது 33 வருட மிஷனெரி ஊழியத்தில் சிறந்த ஒரு மிஷனெரி நண்பனாக அவர் இருந்தார். அவரது மகன் டேவிஸ் தாமஸ் மெஞ்ஞானபுர சபை ஊழியத்தை தொடர்ந்து செய்ய ஆரம்பித்தார். 1870 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ம் தேதி விண்ணகம் எய்தினார். அவரது உடல் மெஞ்ஞானபுரம் ஆலயத்தின் பிரதான ஸ்தலத்தின் வலதுபுரம் ஆலயத்திற்கு வெளியே நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜாண் தாமஸ் அவர்களின் கடின உழைப்பாலும், ஊக்கமான ஜெபத்தாலும் மெஞ்ஞானபுரத்திலும் கிளை சபைகளிலும் ஆவிக்குரிய வளர்ச்சி வெகுவாக தென்பட்டது. பிற் காலத்தில் மெஞ்ஞானபுரத்திலிருந்துதான் வரிசை வரிசையாக அநேகர் குரு பட்டம் பெற்று சிறந்த ஊழியம் செய்து வருகின்றனர். 1908 ஆம் ஆண்டு மெஞ்ஞானபுரத்தில் ஒரே நேரத்தில் ஏழு பெண்கள் கற்பமடைந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் தேவாலயத்திற்கு வந்து, தினமும் தங்கள் வயிற்றில் வளரும் பிள்ளைகளுக்காக தங்கள் வயிற்றில் கைகளை வைத்து ஜெபித்தார்கள். **“தேவனே என் வயிற்றில் வளரும் குழந்தை ஆணாக இருந்தால் குரு பட்டத்திற்கும், ஒரு வேளை பெண்ணாக இருந்தால் குரு மனையாட்டியாகவும் கொடுப்பேன்”** என்று அர்ப்பணிப்போடு ஜெபிப்பார்களாம். என்ன ஆச்சரியம் அந்த ஏழு பெண்களுக்கும் ஆண் பிள்ளைகள் பிறந்து அந்த ஏழு பேரும் குரு பட்டம் பெற்று நெல்லை திருமண்டலத்தில் குருக்களாக பணியாற்றினார்கள் என்று ஒரு சரித்திரம் உண்டு.

மெஞ்ஞானபுரத்தில் உயர்ந்த கோபுரத்தோடு சிறந்து விளங்கும் ஒரு ஸ்திர சபை உண்டென்றால் அது ஜாண் தாமஸ் ஐயர் அவர்களின் ஈடு இணையற்ற அருட்பணியும் தியாகத்தோடு கூடிய பொது நலச் சேவையும் ஆகும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

---

### ***தேவனுக்கே மகிமை***

தேவனுடைய பெரிதான கிருபையினால் தூத்துக்குடி, திரேஸ்புரம், மாதவநாயக்கர் காலனி, **ஜீவ வார்த்தை சபையின்** ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்கள் கலந்துக் கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். இதில் **சகோ. ரதிஸ் குமார், சகோ. ஆலன்** ஆகியோர் பாடல் மற்றும் ஆராதனை வேளையை நடத்த, **சகோ. சுந்தர்சிங்** அவர்கள் இசை மீட்டினார்கள். அதன்பின் **சகோ. ஜெயபிரகாஷ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்த வீடியோ காட்சியினைக் காண்பித்ததோடு ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்துக் கொண்டார்கள்.

அதன் பின்னர் **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் (எசேக்கியேல் 34:26) ஆசீர்வாதமான மழை என்ற தலைப்பில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துக் கொண்டார்கள். இதன் மூலம் அநேகர் தொடப்பட்டனர். மேலும் விசுவாசிகள் அநேகர் ஷாலோம் ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கவும், ஊழியங்களைத் தாங்கவும் தங்களை அர்ப்பணித்தனர். இதை சகோ. ரதிஸ் குமார் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்கள். மேலும் இந்த வாய்ப்பினை வழங்கிய சபைப் போதகர் **Pr. X. ஷெல்டன்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 19

**பதில் எழுதுக :**

1. யாருக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்?
2. ஒரு காரியத்தை செவ்வையாய்ச் செய்கிறதற்கு எது பிரதானம்?
3. யாருடைய எத்தனங்கள் பொல்லாத– வைகள்?
4. செருபாபேலுக்கு முன்பாக பெரிய பர்வதம் என்னவாகும்?
5. யார் இரண்டு கூட்டத்திற்கு சமானமானவள்?
6. கர்த்தருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யார்?
7. "கன்மலையின்மேல் குதிரைகள் ஓடுமோ?" வாசிப்பது எங்கே?
8. மோசே கட்டிய பலி பீடத்தின் பெயர் என்ன?
9. நட்சத்திரங்கள் எங்கிருந்து சிசெராவுடன் யுத்தம் செய்தன?
10. கர்த்தர் என்றென்றைக்கும் சினம் வைக்கிற ஜனம் எது?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.12.2014**

**கடந்த மாத வேத வினா போட்டி எண் 18க்கான சரியான விடைகள் :**

1. லூக்கா 4 : 23
2. 40 வயது. ஆதி. 25:20
3. ஆர்லோத் மேட்டில். யோசுவா 5 : 3
4. எகிப்து. உபா. 4 : 20, எரே. 11:4, 1 இராஜா. 8 : 51
5. காத். 2 சாமு. 24 : 11
6. எஸ்றா. எஸ்றா 7 : 6
7. புத்தியில்லாத மனுஷன். யோபு 11:12
8. காதேஸ். சங். 29 : 8
9. ஸ்தேவானுடைய வீட்டார். 1 கொரி. 16:15
10. சோம்பேறியின் வழி. நீதி. 15 : 19

**கடந்த மாத வேத வினாப் போட்டி எண் 18 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 27 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

1. Sis. S. செல்வி ஜாண் ரோஸ், நாகர்கோவில்.
2. Sis. ரமோலா S. பாபு, நாகர்கோவில். 3. Sis. S. தங்கப்பூ, தூத்துக்குடி.

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

| | |
|---|---|
| **CHENNAI BRANCH OFFICE**<br>**Bro. John Jeyasingh**<br>No.102-2nd Main Road<br>Sathya Nagar, Padi,<br>CHENNAI - 600050.<br>Cell : 9698244577 | **MARTHANDAM BRANCH OFFICE**<br>**Bro. Selvadurai.G**<br>Bethel,<br>25-7/A 1-Block 25, Paruthivilai,<br>Kannakode, Marthandam - 629165<br>Cell : 9487689869 |
| **MUMBAI BRANCH OFFICE**<br>**Bro. Prabhakaran. P.**<br>C/o. Mr. P.Immanuel,<br>C-2, Plot No.123-Old Mhada Colony,<br>Mangalya Co.Op.Society Ltd,<br>Pokharan Road No.2,<br>Thane West - 400610<br>Cell : 9768282699 | **NAGERCOIL BRANCH OFFICE**<br>**Bro. John Sridhar**<br>Ebenezer Plaza, Parama Street,<br>WCC Junction,<br>Nagercoil - 629001<br>Cell : 9698844511, 9698444522 |
| **MADURAI BRANCH OFFICE**<br>**Bro. Chandra Paul. S**<br>6/3, Nellaiappar Puram 7th Street,<br>Tirunagar (p.o)<br>MADURAI-625006<br>Cell : 9382955663 | **TIRUNELVELI BRANCH OFFICE**<br>**Bro. David. R**<br>56 A/4,-C.S.I Church South Street,<br>(Upstairs) STC road,<br>Perumalpuram, Palayamkottai<br>TIRUNELVELI-627007<br>Cell 9698844599 |

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

AXIS BANK

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : 9698244522

## நாட்டு நடப்புச் செய்திகள்

நைஜீரியாவின் வட கிழக்கிலுள்ள யோபே மாநிலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிக் கூடமொன்றில் சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்தது. பள்ளி வளாகத்தில் காலை நேரக் கூட்டத்திற்காக மாணவர்கள் ஒன்று கூடிய நேரத்தில் வெடித்தால், இதில் குறைந்தது 47க்கும் அதிகமானோர் பேர் கொல்லப்பட்டனர். மீட்புப் படையினர் விரைந்து செயல்பட்டு, காயப்பட்டோரை மீட்கும் பணயில் ஈடுபட்டனர்.

---

சுவிட்சர்லாந்து நாட்டின் இடிஎச் ஷுரிச் மற்றும் லுசர்ன் பல்கலைக் கழகத்தின் கலை அறிவியல் மாணவர்கள் இணைந்து அதிவேக எலக்ட்ரிக் கார் ஒன்றை தயாரித்துள்ளனர். இது 100 கி.மீ. வேகத்தில் செல்லும் திறன் கொண்டது. இந்த வேகத்தை 1.785 வினாடிகளில் பெறக்கூடிய திறனும் கொண்டது. இதைத் தயாரிக்கும் பணியில் 30 மாணவர்களைக் கொண்ட குழு ஈடுபட்டது. இதன் எடை மிகவும் குறைவாகும்.

---

தீவு நாடான பாகாமாவில் சிறிய ரக விமானம் ஒன்று அங்குள்ள விமான நிலையத்தில் தரையிறங்க முயன்ற போது விபத்திற்குள்ளானது. இதில் 9 பேர் பலியாயினர். இந்த விபத்தில் விமானம் முற்றிலும் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

இலங்கையில் கொஸ்லாந்தை – மீரியபெத்தை என்ற இடத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 34க்கும் அதிகமானோர் புதையுண்டனர். இந்த நிலச்சரிவில் புதையுண்டவர்களைத் தேடும் பணிகள் 12 நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த நிலையில் தேடும் பணி நிறுத்தப்பட்டு, இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு அந்த இடம் தனியபொரு பிரதேசமாக மாற்றப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நன்றி : www.bbc.co.uk/tamil


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **காபிரியேல் S. புரியா** |
| தந்தையின் பெயர் | : | சன்னு புரியா |
| தாயாரின் பெயர் | : | நகட்டி புரியா |
| பிறந்த நாள் | : | 18.10.1998 |
| படிக்கும் வகுப்பு | : | 8th Std. |
| சொந்த ஊர் | : | ஜரணி |
| மாவட்டம் & மாநிலம் | : | ஜாபுவா, மத்தியப்பிரதேசம் |

**மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–** இவனுடைய தகப்பனார் இயேசுவை அறியாததற்கு முன் சாராயம், பீடி தம்பாக்கு என பல்வேறு பாவங்களுக்கு அடிமையாக இருந்தார். இவருக்கு திருமணம் ஆன பிறகு இவர் சரீரம் வியாதியினால் பாதிக்கப்பட்டு, ஒரு கட்டையை போல் மாறி விட்டது. இதினிமித்தம் மிகவும் கஷ்டப்பட்டார்.

சுகம் அடைவதற்காக எவ்வளவோ மந்திரவாதம் மற்றும் மருத்துவம் செய்தும் குணமாகவில்லை. இயேசுவை அறிந்த இவரது சகோதரர் இவர் சரீரத்தில் எண்ணெய் பூசி ஜெபித்ததில் இவர் பரிபூரண சுகம் பெற்றார். பின்பு இவரது கிராமத்தில் ஊழியர். சந்து டாமோர் வந்து இயேசுவை பற்றிக் கூறினார். பின்பு இயேசுவை விசுவாசித்து 2002–ம் ஞானஸ்நானம் பெற்றார். தொடர்ந்து ஊழியம் செய்ய அர்ப்பணித்து, ஜெய்னி என்றகிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனைக் குறித்து :–** காபிரியேல் நன்றாக படிப்பான். ஓட்டப்பந்தயம் இவனுக்கு பிடித்த விளையாட்டாகும். இவனுக்கு 1 சகோதரனும், 2 சகோதரிகளும் உண்டு.

**ஜெபியுங்கள் :–** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :– Mr. P.Gobi Jeyaseelan, Madurai**

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1056 மாணவர்களில் இன்னும் **252 மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.


Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2012-2014.
TN/WPP-95/SR/2012-2014, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month
Christmas Greetings...
May the sweet magic of Christmas
not only fills in your heart and soul
But also spreads to your dears
Wishing you a Christmas
filled with fun and joy!
Merry Christmas
கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துக்கள்!
By Rt. Rev. Dr. V. Devadass & Family,
Sharing Love Mission,
Shalom Diocese in India,
Shalom Charity Mission.
Owned and Published by V. Devadass from New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadass